MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# ‘கதவு’ எனும் சிறுகதையில் கரிசல் நில மக்களின் வாழ்வியல்

**திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி,**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.17093694.

**Abstract :**

In this short story, Ki.Ra has shown how important the door is in the lives of the people of Karisal. He has also mentioned that the door was used as a toy by the people of Karisal. He has shown how this society makes people in poverty suffer, and how the government acts in such a way that if those with money and power evade taxes, they do not notice them, and if the poor are unable to pay taxes, they are punished. This short story also reveals that they suffer a great loss in their lives. My research is based on this.

**Key Words :** Short Stories - Ki.Ra - Karisal Literature - Society

முன்னுரை

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி. காலந்தோறும் வாழ்ந்த மக்களின் வாழ்வியலை இலக்கியங்கள் படம்பிடித்துக்காட்டுகின்றன. “மனித உணர்ச்சிகளில் ஏதாவது ஒன்றைத் தொட்டு உலுக்குவதுதான் சிறுகதை” என சிறுகதைக்கு இலக்கணம் வகுத்துள்ளார் விந்தன். கி.ராவின் படைப்புகளில் ஒன்றான கதவு (1965) எனும் சிறுகதை மனித உணர்ச்சிகளை உலுக்குவதாக அமைந்துள்ளது. இவர் கரிசல் நிலத்தில் வாழும் மக்களின் வாழ்வியலை அப்படியே தன்னுடைய படைப்புகளில் வாசகர்களின் மனததைத் தொடும் அளவிற்கு அமைத்துப் பாடுவதில் வல்லவர். அதனால் இவர் ‘கரிசல் இலக்கியத்தின் தந்தை’ என அழைக்கப்படுவது பொருந்தும். இக்கட்டுரையில் கரிசல் நில மக்களின் வாழ்வியலை கதவு எனும் சிறுகதை வழி ஆராய்வோம்.

விளையாட்டுப் பொருளாக கதவு

இச்சிறுகதை உருவான காலகட்டத்தை நோக்கும்போது அக்காலத்தில் விளையாட்டுப் பொருட்களைப் பொருளாதாரத்தில் உயர்ந்தவர்கள் மட்டுமே வாங்கும்படியாக இருந்தது. அதனால் கிராமங்களில் உள்ள குழந்தைகள் தங்கள் வீடுகளில் உள்ள பொருட்களையே விளையாட்டுப் பொருளாக வைத்து விளையாடுவர். தெருவில் உள் ள அனைத்து குழந்தைகளும் சேர்ந்து விளையாடுவர். இதனை,

“கதவு ஆட்டம் ஆரம்பமாகியது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள். “எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க” என்றான் சீனிவாசன். உடனே “எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்” என்று சத்தம் போட்டார்கள். “எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம். அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்”. “இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ.” “சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?” ......”

என்பதன் வாயிலாக கரிசல் நிலத்தில் வாழும் குழந்தைகள் தங்கள் வீடுகளில் உள்ள கதவினை வண்டி என்ற விளையாட்டுப் பொருளாக வைத்து விளையாடியதை அறியமுடிகிறது. ஆனால் இன்று நாகரிக வளர்ச்சி காரணமாக கிராமங்களில் குழந்தைகள் சேர்ந்து விளையாடும் பழக்கம் இல்லாமல் போய்விட்டது.

வாழ்ந்து கெட்டவர்கள்


http://Creativecommons.org//license/by/4.0/.

லட்சுமியின் வீடு பழைய காலத்து காரைவீ டு. இவ்வீட்டில் ஒரே ஒரு கதவு மட்டும் போடப்பட்டிருந்தது. அவ்வீட்டில் வாழ்ந்தவர்கள் முதலில் வசதியாக வாழ்ந்துள்ளனர் . பின் மழை பெய்யாததால் விவசாயம் நொடித்துப் போய் வறுமைநிலைக்கு ஆளாகிவிட்டனர் . அதனால் லட்சுமியின் தந்தை மணமுத்தாறுக்கு கூலிவேலைக்கு சென்றுவிட்டார். அன்றைய காலத்தில் கரிசல் நிலங்கள் பெரும்பாலும் வானம் பார்த்த பூமியாகவே இருந்தது . அதனால் மழை பொய்த்துவிட்டால் அவர்கள் உணவுக்கு கஷ்டப்படும் நிலை இருந்தது . அதனால் பிழைப்புத்தேடி பிற ஊர்களுக்குச் சென்றனர். இதனை,

“அது பழைய காலத்துக் காரை வீடு . பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள் இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள்.”

என்பதன் வாயிலாக லட்சுமியின் குடும்பம் வாழ்ந்து கெட்டது என்பதை அறியமுடிகின்றது.

குழந்தையை குழந்தைகளே பார்த்துக் கொள்ளும் அவலநிலை

லட்சுமியின் வயது எட்டு . அவளும் அவளது தம்பியான சீனிவாசனும் , தன்னுடைய தாய் காட்டுக்கு கூலிவேலைக்கு சென்று திரும்பும் வரை தனது தங்கையான கைக்குழந்தையை குழந்தையாகிய இவ்விருவரும் பார்த்துக் கொள்கின்றனர் . இதன் வழி கரிசல் நில மக்களின் அவலநிலையை அறியமுடிகின்றது. இதனை,

“அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள் . அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும் வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.”

என்பதன் வழி குழந்தையை கு ழந்தைகளே பார்த்துக் கொள்ளும் அவலநிலை குறித்து அறியமுடிகின்றது.

தீர்வையைக்(வரி) கட்ட முடியாமல் இருத்தல்

அரசியலுக்கு மாறான குற்றங்கள் என்பவை “இறையிறுக்காமை, உறுபொருள் கவர்தல் , பகையொற்று, அறைபோதல், அரசனது பொருள் கவர்தல் , அரசனது இன்பப் பொருள் நுகர்தல் , ஊருக்கு அல்லது நாட்டிற்கு இரண்டகஞ் செய்தல் , அரசற்கிரண்டகஞ் செய்தல், அரசானை மீறல், கொள்ளையடித்தல், கலகஞ் செய்தல்”[1] என ஞா.தேவநேயன் பழந்தமிழாட்சி எனும் நூலில் விளக்கம் தருகின்றார். இறையிறுக்காமை என்பது வாி செலுத்தாமையாகும் . வாி செலுத்தாதவர்களின் சொத்து பறிமுதல் செய் யப்படுவது அன்றும் இன்றும் ஒரு சட்டமாகும் . இதனை “இறையிறுக்காமைக்குச் சொத்துப் பறிமுதலும், உறுபொருள் கவர்தலுக்குச் சிறையும், பிறவற்றிற்குக் கொலையும்”[2] தண்டனையாக வழங்கப்பட்டது என ஞா . தேவநேயன் பழந்தமிழாட்சி எனும் நூலில் குறிப்பிடுகின்றார். குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி வருகிறார். பின் லட்சுமியிடம் அவளுடைய தாய் , தந்தையை விசாரித்துவிட்டு தீர்வையைக் கட்ட வேண்டும் எனக் கூறிவிட்டுச் செல்கிறார். இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

"குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும்போது கிராமத்து தலையாரி அங்கே வந்தான். "லட்சுமி உங்க ஐயா எங்கே ?" "ஊருக்குப் போயிருக்காக" "வந்தா, தீர்வையைக் கொண்டு வந்து போடச் சொல்லு. தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு." "சரி" என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்"

என்பதன் வாயிலாக வீட்டு வறுமையின் காரணமாக தீர்வையைக் கூட செலுத்த முடியாத நிலையில் கரிசல் நில மக்கள் வாழ்ந்ததை இச்சிறுகதை படம்பிடித்துக்காட்டுகிறது. அன்றிலிருந்து இன்றுவரை அரசாங்கம் பணம், பதவி படைத்தவர்கள் வரி ஏய்ப்பு செய்தால் கண்டு கொள்வதில்லை. ஆனால் ஏழைகள் வரி கட்டமுடியாமல் இருந்தால் அவர்களை தண்டிக்கின்றனர். இந்நிகழ்வு நம் சமூகத்தில் அன்றாடம் நிகழக்கூடிய நிகழ்வாகவே உள்ளது.

ரங்கம்மா தனது வறுமைநிலையினை தலையாரியிடம் எடுத்துக் கூறுதல்

தலையாரி, லட்சுமியின் தாயான ரங்கம்மா இருக்கும்போதே வீட்டிற்கு வந்து தீர்வையைக் கட்டச் சொன்னார். அப்பொழுது ரங்கம்மா தனது வறுமைநிலையினை எடுத்துக் கூறுகிறாள். ஆனாலும் அவரது மனம் இரங்கவில்லை. இதனை,

"ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாச மாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்பேன் ? ஏதோ காட்டிலே போய் கூலிவேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே. பெரிய காரியம், உங்களுக்குத் தெரியாததா ?" என்றாள்" இந்த வார்த்தைகள் தலையாரியின் மனதைத் தொடவில்லை, இந்த மாதிரியான வசனங்களை பலர் சொல்லிக் கேட்டவன் அவன்."

என்பதன் வாயிலாக தலையாரியிடம் ரங்கம்மா தனது வறுமைநிலையினை எடுத்துக் கூறியதை அறியமுடிகின்றது.

தீர்வையைக் கட்டாததற்கு கதவினை எடுத்துச் செல்லுதல், பனியின் காரணமாக கைக்குழந்தை இறத்தல்

தீர்வையைக் கட்டாததற்காக தலையாரி நான்கு பேருடன் வந்து கதவினை எடுத்துச் சென்றுவிடுகிறார். கார்த்திகை மாத வாடைக் காற்றின் காரணமாக கதவு இல்லாததால் அது வீட்டிற்குள் நுழைந்து கைக்குழந்தையின் உடல் ஆரோக்கியத்தை மிக மோசமாக்கியது. பின் அக்கைக்குழந்தை இறந்துவிட்டது. இந்நிகழ்வு ரங்கம்மாவுக்கு மிகுந்த மனவேதனையைத் தந்தது. இதனை,

"இரவு வந்துவிட்டால் குளிர் தாங்கமுடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள். கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப் போல் வீட்டினுள் வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒருநாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த


http://Creativecommons.org//license/by/4.0/.

வீட்டைவிட்டும் அவர் களையும் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது . ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்."

என்பதன் வாயிலாக கரிசல் நில மக்கள் வறுமையின் காரணமாக அம்மக்கள் படும்துயரங்களை நாம் அறியமுடிகின்றது.

முடிவுரை

இவ்ஆய்வுக்கட்டுரையில் கரிசல் நில மக்களின் வாழ்வியலை நன்கு அறியமுடிகின்றது. கி.ரா. தனது எழுத்துக்கள் மூலம் கரிசல் நில மக்கள் வாழ்வியலையும் , அவர்கள் வாழ்வில் அடையும் துயரங்களையும் நம் கண்முன்னே நாம் உணரும் வகையில் எடுத்துக் கூறியுள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. ஞா.தேவநேயன், பழந்தமிழாட்சி, ப.116.
2. மேலது, ப.118.


http://Creativecommons.org//license/by/4.0/.